Koviloor Digital Library

3-9

உ

சிவமயம்

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

கற்பகக் களிறு

(விநாயகர் வழிபாட்டுப் பாடல்கள் தொகுப்பு)





4476
Δ2,11 (பின்)

தொகுப்பு:

கவிஞர்

இராகவன்முத்து, BSc.,Dip.Geog,CAIIB

(பாங்க் ஆப் இந்தியா, மதுரை)

67-68, மெ. மெ. வீதி. காரைக்குடி-623 001.

Koviloor Digital Library

Koviloor Digital Library

2323

உ

சிவமயம்


ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

3-2

கற்பகக் களிறு

(விநாயகர் வழிபாட்டுப் பாடல்கள் தொகுப்பு)

4476
D2111(பின்)



பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக்(கு) அணிவோமே.

— வெற்றிவேற்கை

தொகுப்பு:

கவிஞர்

இராகவன் முத்து, BSc ,Dip Geog, CAIIB

(பாங்க் ஆப் இந்தியா, மதுரை)

67-68, மெ. மெ. வீதி. காரைக்குடி-623 001.

Koviloor Digital Library

உ

சிவமயம்

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

தோற்றுவாய்

உலகிற் பிறந்த மக்கள் ஒவ்வொரு நாளும் எண்ணற்ற செயல்களைச் செய்கின்றனர் அவற்றுள் தம்மையறியாமலேயே யாவரும் இன்புறும் வண்ணம் உயர்ந்த எண்ணங்களை வளர்ப்பதான செயல் வழிபாடு ஒன்றே அதனாலேயே prayer is the integral part of life என்ற கூற்று வழங்கலாயிற்று. முறையான வழிபாட்டின் சிறந்த வடிவம் இனிய பாடல்களை ஓதி இறைவனை நினைந்து தொழுதல் ஆகும். அவ்வகையாக வழிபாடு செய்யும் காலை ஓதுதற்கு ஏற்ற வகையில் இனிய சுவைப்பாடல்களை அருளாளர்கள் நிரம்ப இயற்றித் தந்துள்ளனர்.

இறைவன் பல்வேறு திருமேனிகளைத் தாங்கி நின்று திருவருள் பொழிகின்றான். அவ்வடிவங்களில் மனங்கவர்வதும் சிறார் முதல் பெரியோர் வரை யாவரும் எளிதில் வழிபட்டுப் பயன் பெறத் துணை செய்வதும் யானை முகம் கொண்ட விநாயகரின் திருமேனியாகும். இந்து சமயத்தின் அனைத்துக் கூறுகளும் முதலில் தொழுகின்ற மூர்த்தி இவ்விநாயகரே. இந்திய நாட்டில் மட்டுமின்றி உலகின் பல இடங்களிலும் இவரை மக்கள் வழிபடுகின்றனர். விநாயகப் பெருமானை வழிபட்டு இனிய தமிழ்ப் பாமாலை சூட்டி அருளைப் பெற்று வாழ்ந்த அருளாளர்களில் ஔவையாரும் நம்பியாண்டார் நம்பியும் நினைவிற்கொள்ள வேண்டியவர்கள். ஔவையார் அருளிய, அனைவர்க்கும் அறிமுகமான, அகவல் நூலில் 'அற்புதம் நின்ற கற்பகக் களிறே' என அவர் இப்பெருமானை விளிக்கின்றார். அத்தொடரை இச் சிறு நூல் தன் பெயராய்க் கொள்கின்றது.

Koviloor Digital Library

3-2

விநாயக மூர்த்தி எழுந்தருளி இருக்கும் தலங்களுள் மிகச் சிறந்தது காரைக்குடியை அடுத்த பிள்ளையார்பட்டியாகும். இங்கு புடை ஓவிய வடிவில் காட்சி தரும் பெம்மான் கற்பக விநாயகர் என்று திருப்பெயர் கொண்டு வாழ்கின்றார். கருணையே வடிவமாக, அடியவர்க்கு எளியவராக, அருள் வழங்க முன் நிற்கும் அக்கற்பகமூர்த்தியின் பொற்கழற்கு இந்நூல் காணிக்கை ஆகிறது.

விநாயக மூர்த்தியைப் போற்றியபின்பே எச்செயலும் செய்வர். எந்த நூல் இயற்றினும் நூலாசிரியர் நூல் இனிது நிறைவுறவேண்டி இவர் மீது காப்புப் பாடல் இயற்றுவர். அவ் வண்ணம் இக்கற்பக விநாயகர் மீது பாடப்பெற்ற எண்ணற்ற பாடல்களிற் சிலவற்றை இங்கே தொகுத்து வழங்குகின்றேன்.

அன்பர்கள் தைப்பூசத்திற்குப் பழநிமலைக்குச் செல்லும் பாத யாத்திரை நினைவாக மூன்றும் ஆண்டு மலராக இந்நூல் வெளிவருகிறது. இச்சிறு பாமாலையை அச்சேற்றி வழங்கும் பணியில் என்னுடன் பங்கு கொண்ட அருள் மனத்து அண்ணல்கள் யாவரும் வாழ்வியல் இன்பங்கள் அனைத்தும் நிறையப் பெற்று மகிழ்ந்திருக்க எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையார் பொற்கழல் தொழுவேன்

ஒன்றுக்கும் பற்றாச் சிறியேனையும் ஆட்கொண்டு தமிழும் சுவையும் வாழ்வும் உதவிய கற்பக விநாயகமூர்த்தி "என்னை நினைந்து அடிமை கொண்டு" "தன்னை நினைந்து தமிழ் தொகுக்க வரமும் நலமும் தந்த கருணையை நினைந்து நெகிழ்ந்து தொழுத மைவன்.

67-68, மெ.மெ. வீதி,
காரைக்குடி,
7—1—1981

பணிவுடையன்,
இராகவன் முத்து

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

பிடிஅதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனது அடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர் தேவாரம்

பிடி	—	பெண்யானை
வடி	—	வடிவம்
இடர்கடி	—	துன்பத்தை நீக்கும்
வலிவளம்	—	தலத்தின் பெயர்
இறை	—	சிவபிரான்



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

—திருமூலர்

இந்தின் இளம்பிறை	—	பிறைச்சந்திரன்
எயிற்றனை	—	பல்லை உடையவனை
புந்தி	—	அறிவு

Koviloor Digital Library

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே! அப்பம்
இடிஅவலோ(டு) எள்உருண்டை கன்னல் — வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்

—கபிலர்



அடி — விநாயகர் திருவடிக்கீழ்
கன்னல் — கரும்பு
வடிசுவை — தெளிந்தசுவை



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

—கபிலர்

பீடு — பெருமை
உரு — அழகு



நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதகமே புரம்மூன்றுஎரித்த
வில்லான் அளித்த விநாயக னேஎன்று மெய்ம்மகிழ
வல்லார் அகத்தன்றி மாட்டான் இருக்க மலர்த்திருவே.

— கபிலர்

பழிப்பில் — குற்றமில்லாத
போதகம் — ஆனை (விநாயகர்)
வில்லான் — சிவபிரான்
மலர்த்திரு — இலட்சுமி

Koviloor Digital Library

மணிசிந்து கங்கைதன் மானக்
குருளையை வாளரக்கர்
அணி சிந்த வென்றளம் ஐயர்க்(கு)
இளங்கன்றை அங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத்தைத்
தொடர்ந்தோர் பிறவிப்
பிணிசிந்து கான்முளையைப் பிடித்தோர்க்(கு)
இல்லை பேதுறலே.

— அதிரா அடிகள்

குருளை — குழந்தை
அணி — அணிவகுப்புப்படை
ஐயர்க்குஇளங்கன்று — சிவனார்க்கு மகனான விநாயகர்
துணி — துண்டம்
வாய்ப்பெய்த — வாயிலிட்ட
போதகம் —யானை
பேதுறல் —கலக்கம்



என்னை நினைந்(து)அடிமை கொண்(டு)என் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் — புன்னை
விரசுகமழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசு மகிழ் அத்திமுகத் தான்.

— நம்பியாண்டார்நம்பி

புன்னை — புன்னைமரம்
வியன் — பெருமை
முக்கண் அரசு — சிவபிரான்
அத்திமுகத்தான் — ஆனைமுகமுடைய விநாயகர்

Koviloor Digital Library

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால்— நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்.

—நம்பியாண்டார்நம்பி.

மருப்பு — தந்தம்.
பொருப்பு — மலை போன்ற விநாயகர்
மலம் — அழுக்கு.



வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெற்றி முகத்து விநாயகனைத் தொழ
புத்தி மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை அப்பனைத் தொழவினை அறுமே.



மண்உல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்நுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்

—கந்தபுராணம்

மாசற — குற்றம் நீங்கும்படியாக
கண்நுதல் — நெற்றியில் கண்
களிற்றுமாமுக — ஆனையின் திருமுகத்தை உடைய
பண்ணவன் — புகழ் மிகுந்த விநாயகமூர்த்தி

Koviloor Digital Library

நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்
வெல்லும் ஆனை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்(கு)உரி யானை வழுத்துவாம்

—பிரமோத்தர காண்டம்

வல்லபைக்கு உரியானை — வல்லபையின் தலைவராகிய
விநாயக மூர்த்தியை
வழுத்துவாம் — வணங்குவோம்



முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுதகற்றும் முகத்தி ஞானை
அற்பசுகத்(து) எனைஅழுத்தா ஐங்கரனைப்
பிற்பவமும் அகற்றும் கோவைச்
சொற்பழுது புரியாத வணிகர்குலம்
தினம்பணியும் துணைத்தா ளானைக்
கற்பகத்தின் மிடிஅகற்றும் கற்பகமாம்
விநாயகனைக் கருத்துள் வைப்பாம்

—கோவிலூர் ஆண்டவர்

முற்பவத்தில் — முந்தைப் பிறவியில்
ஐங்கரன் — ஐந்து திருக்கரங்கள் உடைய
விநாயகமூர்த்தி
பிற்பவம் — மீண்டும் வரும் பிறப்பு
கோவை — (உயிருக்குத்)தலைவரை
சொற்பழுது புரியாத — சொன்னசொல் தவறாது நடக்கும்
கற்பகத்தின் மிடி — வானுலகில் இருக்கும் கற்பக
மரத்தின் வறுமை

Koviloor Digital Library

கோவேஎம் கோமானே மருதங் கூர்எம்
குலதெய்வக் கற்பகமே கோது நீக்கும்
தேவேஎன்(று) உயர்குலநல் வணிகர் அன்பால்
சென்றுஇறைஞ்ச மணப்பேறு செல்வப்பேறு
நாவார்கல் விப்பேறு மக்கட் பேறு
நயப்பேறு முதலெவையும் நல்கி எந்தாய்
ஆவாநல் அருட்பேறும் அளிக்கின் றுய்என்(று)
அகிலமெல்லாம் எடுத்துரைப்ப(து) அறியார் யாரே!

— சொக்கலிங்கஅய்யா

மருதங்கூர் — பிள்ளையார்பட்டித் திருத்தலம்,
கோது — குற்றம், துயரம்,
தேவே — கடவுளே,
நாவார் கல்வி — வாக்குவன்மையுடன் கூடிய(திருந்திய) கல்வி,
நல்கி — வழங்கி.



தனையன் வேண்டினும் சம்பத்து வேண்டினும்
மனையை வேண்டினும் வான்பயன் வேண்டினும்
கனைவளங் கொள் கணேசபு ரேசனை
இனிய கற்பக மூர்த்தியை ஏத்துமே.

— சொக்கலிங்க அய்யா

Koviloor Digital Library

ஓத வினைஅகலும் ஓங்கு புகழ்பெருகும்
காதல் பொருளனைத்தும் கைகூட்டும் — சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப் போர்தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

— பெருந்தேவனார்

காதல் — விரும்பிய
சீதம் — குளிர்ச்சி
கோட்டுமால்வரை — உச்சியையுடைய பெரிய மேருமலை
கோட்டுவாரணம் — தந்தத்தை உடைய ஆனை



வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

— ஔவையார்.

மாமலராள் நோக்கு — திருமகளின் அருட்பார்வை
நுடங்காது — நோயாற் சோர்வுறாது
துப்பார் — பவழம் போன்ற



பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்(து)உனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

— ஔவையார்

கோலம் — அழகு
கரி — யானை

Koviloor Digital Library
A476
Δ2,11(பிள்)

ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போர்ஆனைக் கன்றைப் போற்றினல் — வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரஉற் பத்திவரும்
சத்திவரும் சித்திவரும் தான்

—திரு ஆனைக்கா உலா

ஏர் — அழகு
ஆனைக்கன்று — சிவபிரான்
போரானைக் கன்று — விநாயகமூர்த்தி



வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

—உமாபதி சிவம்

மறை — வேதம்
பான்மைதரு — தகுதிஉடைய
பார் — உலகம்
விளங்க — புகழ் கொண்டுவளர
நால்வாய் — தொங்கும் வாய் ஆன துதிக்கை
பரவி — வணங்கி



வான நாடர்கள் மாதவர் நாடரும்
மோன ஞானம் முழுதும் உணர்ந்திடத்
தான மேவும் தடவிக டாசலத்(து)
ஆனைமாமுகத்(து) அண்ணலை ஏத்துவாம்

—சிதம்பர புராணம்

மாதவர் — முனிவர்கள்
நாடரும் — தேடஅரிய

Koviloor Digital Library

ஞாலம் எல்லாம் நயந்து திறையிடும்
காலன் அஞ்சும் கடும்பிணி நீங்கிடும்
கோலம் நல்கும் குறையா நிதிதரும்
ஓலம் என்ற களிற்றினை உள்குவாம்.

— திருவையாற்றுப் புராணம்

திறை — கப்பம்
காலன் — இயமன்
கோலம் — அழகு, பெருமை.
ஓலம்என்றகளிற்றினை — அபயக்குரல்தந்த விநாயகரை.



திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம(து) உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

— விருத்தாசலப் புராணம்

பருவமாய் — பக்குவமாய்



நடையூறு சொன்மடந்தை நல்குவதும் நம்மேல்
இடையூறு நீங்குவதும் எல்லாம்—புடையூறு
சேனைமுகத்(து) ஆள்இரியச் சீறுமுகத்(து) ஊறுமதத்(து)
ஆனைமுகத் தானைநினைத் தால்.

— புறப்பொருள் வெண்பாமாலை

நடையூறு — ஒழுக்கம் வளர்க்கும்
சொன்மடந்தை — கலைமகள்
புடையூறு — திரண்டு மிகுந்த
ஆள்இரிய — காலாட்படைகள் ஓட

Koviloor Digital Library

விரிதரு பசும்பொற் குன்றில் பாரதம்
விளங்கத் தீட்டி
வரிசெயும் மருப்புத் துண்டம்
வளர்சடைச் செருகி யாங்கு
தெரிதரக் குழவித் திங்கள்
சென்னிசேர்த்(து) ஆலங்காட்டில்
பரிவுசெய் மூலத் தானக்
கரியினைப் பணிதல் செய்வாம்.

— திருவாலங்காட்டுப் புராணம்



உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்(து)உண்டு கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்

—திருவிளையாடல் புராணம்

தொடர் — சங்கிலி
தறுகண் — வீரம்
சித்திவேழம் — சித்திவிநாயகர்

Koviloor Digital Library

பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே — மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தென் உளத்து

—குமரகுருபரர்

தளை	—	கட்டு
நேசம்	—	அன்பு, பத்தி
காரார்வரை	—	கரியமலை (பர்வதராசன்)
கன்னிப்பிடி	—	பெண்யானையாகிய பார்வதி
ஓரானை	—	விநாயகமூர்த்தி



திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகடு அசக்கு அரவின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

—கந்தபுராணம்

திகடசக்கரம்	—	திகழ்கின்ற பத்துக் கைகள்
சகடசக்கரம்	—	சிவபிரானது நிலத்தேரின் உருளையானவன்
தாமரை நாயகன்	—	சூரியன்
அகடு அசக்கு அரவு	—	திருவயிற்றைச்சுற்றியுள்ள பாம்பு
அரவின்மணி	—	நாகரத்தினம்

Koviloor Digital Library

உச்சியின் மகுடம் மின்ன
ஒளிர்தர நுதலின் ஓடை
வச்சிர மருப்பின் ஒற்றை
மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க
வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்கரக்
கணபதிக்(கு) அன்பு செய்வாம்

—கந்தபுராணம்

நுதலின் ஓடை — நெற்றிப்பட்டம்
கிம்புரி — யானைத்தந்தத்தின் பூண்
கச்சி — காஞ்சிப்பதி
கவரிதூங்க — சாமரைகள் தொங்க



தழைவிரி கடுக்கை மாலை
தனிமுதல் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற
கோட்டது குறைஎன் றெண்ணிப்
புழைநெடுங் கரத்தாற் பற்றிப்
பொற்புற் இணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய
மலரடி சென்னி வைப்பாம்.

— அதிவீரராமபாண்டியர்

கடுக்கை — கொன்றை
தனிமுதல் — சிவபெருமான்
குழவி — பிறை
இற்ற கோட்டது குறை — ஒடிந்த கொம்பின் மறுபாதி
புழை நெடுங்கரம் — துதிக்கை
களிறு — யானை
செய்ய — சிவந்த
சென்னி — தலை

Koviloor Digital Library

மும்மைப் புவனம் முழுதீன்ற
விடைப்பாகன் முதல்வியோடும்
அம்ம முத்தம் தருகஎன
அழைப்ப மற்ருங்கே சிறிதகன்று
தம்மின் முத்தம் கொளநோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரித் திருத்தாள்கள்
சென்னி மிசையிற் புனைவாமே,

— நந்திக்கலம்பகம்

மும்மைப்புவனம் — மூன்று உலகம்
விடைப்பாகன் — காளைமீதுவரும்சிவபிரான்.
முதல்வி — உமையவள்
செம்மைமுளரி — செந்தாமரை
சென்னிமிசையில் — தலைமீது



தழைசெவிச் சிறுகண் தாழ்கைத்
தந்தசிந் துரமும் தாரை
மழைமதத் தறுகண் சித்திர
வாரண முகத்து வாழ்வை
இழைஇடைக் கலசக் கொங்கை
இமகிரி மடந்தை யீன்ற
குழவியைத் தொழுவன் அன்பால்
'குறைவற நிறைக' என்றே.

—கம்பநாடர் (இராமகாதை—மிகைப்பட ல்)

இழைஇடை — நூல்போல் நுண்ணிடை
இமகிரிமடந்தை — இமயமலையரசன் மகளான உமையவள்

Koviloor Digital Library

நீடாழி உலகத்து மறைநாலோ(டு) ஐந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பு, ஆக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

— வில்லிபுத்தூரார்.

முனிராசன் — வியாதமுனி
ஆகவம் — மாபாரதப்போர்
கோடு — தந்தம்
வெற்பு — மலை
கூர்வாம்அரோ — நிறைந்தவர் ஆவோம்.



முருகார் மலர்த்தாம முடியோனை அடியார்
முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கும் மதயானை வதனச்
செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி
புத்தேளிரும்
ஒருகோடி பூதே வரும்கை தொழுங்கோவை
உறவுன்னுவாம்

—வில்லிம்புத்தூரார்

முருகு — மணம்
தாமம் — மாலை
திருகாமல் — மாறுபடாமல்
வதனம் — முகம்
புருகூதன் — தேவேந்திரன்
புத்தேளிர் — தேவர்
பூ — பூவுலகம்
உன்னுவாம் — எண்ணி வணங்குவோம்

Koviloor Digital Library

மாரன் எடுத்து வளைக்குமொரு கரும்பை ஒடித்து
மலர்சிதறி
நாரி யடுத்த வளிமாலை குலையத்துரந்து நயந்தோடி
வீர மனத்து வினைப்பாகர் குறிப்பின் ஒழுகி விளையாடும்
ஈரம திச்செஞ் சடைக்களிநல்யானை யிணைத்தாள்ஏத்துவாம்

—பிரபுலிங்கலிலை

மாரன்	—	மன்மதன்
நாரியடுத்த	—	வில்லின் நாணைச்சுற்றும்
வளிமாலை	—	வண்டுக் கூட்டம்
துரந்து	—	துரத்தி



ஒருமுலை சுரந்த தீம்பால்
உண்புழி மழலைத் தீஞ்சொல்
முருகனுக் கென்றே ஈன்ற
முதல்விவைத் திருந்த மற்றைத்
திருமுலை வருடு வான்போல்
திரள்புழைக் கரத்தால் உண்ணும்
வரிநுதல் களிற்றின் செந்தா
மரையடி வணங்கு வோமே

—சங்கரநாராயணர் கோயிற் புராணம்

உண்புழி	—	உண்ணும்பொழுது
முதல்வி	—	உமையவள்
புழைக்கரம்	—	துதிக்கை
வரிநுதல்களிறு	—	ஆனைமுகவிநாயகர்

Koviloor Digital Library

தாய்குறங்(கு) ஏறித் தந்தை
சடையிடை மதிகே துப்பேர்க்
காம்சின அர(வு)என்(று) அஞ்சிக்
கடுக்கையுள் புகக்கை நீட்டிப்
பாய்புனல் முகந்து நின்று
பழிச்சுநர் வாயில் ஈன்றோர்
வாய்நகை தழைப்ப வீசும்
மழைமதக் களிற்றைத் தாழ்வாம்

— சீகாளத்திப்புராணம்

குறங்கு — தொடை
கடுக்கை — கொன்றைமாலை
பழிச்சுநர் — வணங்கும் அன்பர்
மழைமதக்களிறு — விநாயகர்



பண்ணியம் ஏந்தும் கரந்தனக்(கு) ஆக்கிப்
பால்நிலா மருப்புஅமர் திருக்கை
விண்ணவர்க்(கு) ஆக்கி அரதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க்(கு) ஆக்கிக்
கண்ணில்ஆ ணவவெங் கரிபிணித்(து) அடக்கிக்
கரிசினேற்(கு) இருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபச்
சகாயனை அகழ்ந்தழீகிக் களிப்பாம்

— திருத்தணிகைப் புராணம்

பண்ணியம் — பலகாரம் (அப்பம் முதலியன)
மருப்பமர்திருக்கை— தந்தம் இருக்கும் துதிக்கை
அரிதசனக்கலசம் — இரத்தினக் கலசம்
பிணித்து — கட்டி
கரிசினேன் — அன்பன்
இருகை — வரத, அபயக்கைகள்

Koviloor Digital Library

புயல்காட்டும் பனிவரையின் பிடிதழுவும்
சிவவேழம் பொருப்பில் வானில்
இயல்காட்டும் இருபிடிசேர் முந்நாலு
துதிக்கையின்முன் ஈன்ற ஞானச்
செயல்காட்டும் ஒருகோட்டின் இருகோட்டு
வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல்காட்டும் திருமேனி மழைமதச்சண்
பகக்களிற்றை மனத்துள் வைப்பாம்

— திருக்குற்றாலப் புராணம்

புயல் — மேகம்
பனிவரை — இமயமலை
பிடி — பெண் யானை (உமையவள்)
கோட்டின் — தந்தத்தின்
செக்கர்வானை — சிவந்த வானத்தை
மயல்காட்டும் — மயங்கிச் சொக்க வைக்கும்



நீர்பூத்த இதழிபுனை சிற்பரனார் அற்புதனார்
சிவையோர் பாகர்
நீர்பூத்த திருவுளத்தில் நினைத்தபடி வேதமுனி
நிகழ்த்த லோடும்
ஏர்பூத்த ஒருகோட்டால் இலகுபா ரதம்மேரு
இடத்தே தீட்டும்
போர்பூத்த நெடுந்தடக்கைப் பொல்லாத பிள்ளைபதம்
போற்றல் செய்வாம்

— திருநெல்வேலிப் புராணம்

இதழி — கொன்றைமாலை
சிவை — உமையவள்
வேதமுனி — வியாதமுனி
ஏர் — அழகு
கோட்டால் — தந்தத்தால்
நெடுந்தடக்கை — பெரிய, அகன்ற துதிக்கை

Koviloor Digital Library

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தான் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையன்
தரும் ஒரு வா ரணத்தின் தாள்கள்
உருகோட்(டு) அன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றேஎன்னச் செய்யும் தேவே

—சிவஞான சித்தியார்

கோட்டன்	—	கொம்பன்
நால்வாய்	—	தொங்கும்(துதிக்கை) வாய்
கோட்டம்	—	வளைவு
இதழி	—	கொன்றை
சடையான்	—	சிவபிரான்
வாரணம்	—	ஆனை (விநாயகர்)
உருகோட்டு	—	உருவினை மனம்பதித்து
ஓவாதே	—	இடைவிடாமல்
திருகு	—	வஞ்சம்
ஓட்டும்	—	ஒழிக்கும்



வஞ்சகத்தில் ஒன்றானைத் துதிக்கைமிகத்
திரண்டானை வணங்கார் உள்ளே
அஞ்சரண மூன்றானை மறைசொல்நால்
வாயானை அத்தன் ஆகித்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னிஅணி
ஆறானைத் துகள்எ ழானைச்
செஞ்சொல்மறைக்(கு) எட்டானைப் பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்

— நிரம்ப அழகிய தேசிகர்

சரணமூன்றான்	—	தாள்பதிக்கமாட்டான்
அத்தன்	—	தலைவன்
துஞ்சவுணர்	—	இறக்கத்துணிந்தஅரக்கர்
துகள்எழான்	—	குற்றமற்றவன்
பர	—	திருப்பரங்குன்றம்

Koviloor Digital Library

ஓங்குமொரு மருப்பானை உயிர்க்குயிராய் இருப்பானை
உரக வேந்தன்
தாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச்
சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்தந் தளித்தானைப்
பசும்பொன் தோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவில்ஐந்து கரத்தானைப்
போற்றல் செய்வாம்

—சிவராத்திரிப் புராணம்

மருப்பு	—	தந்தம்
உரகவேந்தன்	—	ஆதிசேடன்
ஆனைமுகத்தானை	—	கயமுகஅசுரனை
சயிலமான்	—	மலைமகள்ஆகிய உமையவள்
பாங்கு	—	(இடப்)பக்கம்
மழுத்தானை	—	மழுஆயுதம்
பரித்தான்	—	சிவபெருமான்
தோடு	—	இதழ்
பொருவில்	—	இணையற்ற



Koviloor Digital Library

4476
Δ2,11(பின்)

Koviloor Digital Library

உள்ளக் குடியிருப்பாய்! ஒன்றித் துணைபுரிவாய்!
அள்ளி வளஞ்சொரிவாய்! ஐங்கரனே! வள்ளலே!
கண்ணுதலே! கற்பகமே! காக்கும் கடம்பூண்டாய்!
மண்மிசையிற் சேர்ப்பாய் மகிழ்வு.

— (தொகுப்பாசிரியன்)
இராகவன் முத்து





வாழ்த்து

மலையிருப்பான் மரத்தடியில் குடியிருப்பான்
மருக்கரையும் குளக்கரையும் வீற்றிருப்பான்
கலைவளர்ப்பான் திருநிலைக்கக் கருணைசெய்வான்
கற்பகமாம் பெயர்படைத்தான் புகழ்வளர்ப்பான்
தலைசிறக்க வாழ்ந்திருக்கக் கடைக்கண் பார்த்துத்
தமிழமுதில் மிகமகிழ்வான் மருதங் கூரின்
நிலையிருப்பான் பெயர்வாழி! போற்றும் அன்பர்
நேயமனை சுற்றமெலாம் நீடு வாழி!

— இராகவன் முத்து

மல்லிகை பிரிண்டர்ஸ், மதுரை-1.